**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>**
**<u>D.V.C. No. 1/2021</u>**

இந்நீதிமன்ற எழுத்தர் திரு. மோகன், Bench Clerk என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் 2 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2023 ம் ஆண்டு மே திங்கள் 18 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். முத்துலட்சுமி (PW2)<br>வயது. | நாள் 18.05.2023 |
| க/பெ. மதுரை | தொழில் |
| கிராமம் | வட்டம், |

**<u>மனுதாரர் தரப்பு இரண்டாம் சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

1. நான் மனுதாரர் கலையரசியின் அம்மா என்றால் சரிதான். எனக்கு தனலட்சுமி, கலையரசி என்ற இரண்டு மகள்களும், குமார் என்ற மகனும் உள்ளனர்.
2. நான் கூலி வேலைக்கு செல்வேன். எனக்கு சொத்து எதுவும் கிடையாது. கூலி வேலை செய்து தான் எனது மகளுக்கு 22 சவரன் நகை திருமணத்திற்கு கொடுத்தேன் என்றால் எனது கணவர் கம்பெனியில் வேலை செய்தார். அவர் மாதம் 15,000/ ரூபாய் சம்பாதித்து வந்தார்.
3. அவ்வாறு நான் கூலி வேலைக்கு செல்வேன் என்றும், எனது கணவர் கம்பெனிக்கு சென்று மாதம் 15,000/ ரூபாய் சம்பாதித்தார் என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
4. எனது மகள் கலையரசிக்கு 19.01.2018 அன்று திருமணம் ஆனது. திருமணத்தின் பிறகு எனது மகளும், மருமகனும் எத்தனை நாட்கள் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றால் 6 மாதம் செங்கல்பட்டில் உள்ள எனது மருமகனின் அண்ணன் வீட்டில் வசித்து வந்தார்கள். அதன் பின்னர் 6 மாதம் காஞ்சிபுரத்தில் பொன்னேரி கரையில் இருவரும் வாடகை வீட்டில் சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள்.
5. விளங்கனூரில் எவ்வளவு நாட்கள் எனது மகளும், எனது மருமகனும் குடியிருந்தார்கள் என்றால் சுமார் 1 மாத காலம் சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள் அதற்கிடையே அவ்வவ்போது இருவருக்கும் சண்டை ஏற்பட்டு வந்தது.

எனது மருமகன் எனது மகளுடன் சண்டை போட்டுவிட்டு எனது மகளை செங்கல்பட்டில் அவரது அண்ணன் வீட்டில் விட்டுவிட்டார். அதன் பின்னர் எனது மகன் சென்று எனது மகளை எங்கள் வீட்டிற்கு அழைத்துவந்தார்.

6. மேற்சொன்ன விவரங்களை எனது மகள் கலையரசி அவரது மனுவில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிட்டுள்ளார். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் மேற்சொன்ன சங்கதிகள் இடம்பெற்றுள்ளதா என்றால் இடம் பெற்றுள்ளது.

7. எனது பிரமாண வாக்குமூலத்தில் மேற்சொன்ன சங்கதிகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது மகள் 48 நாட்கள் கருவுற்றிருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது யார் வீட்டில் இருக்கும் போது எனது மகள் கருவுற்றிருந்தார் என்றால் செங்கல்பட்டில் எனது மருமகனின் அண்ணன் வீட்டில் இருக்கும் போது எனது மகள் கருவுற்றிருந்தார்.

9. கரு கலைந்ததற்காக எனது மகளை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேனா என்றால் அழைத்து சென்றேன். அவ்வாறு நான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதற்கான மருத்துவ ஆவணங்களை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியவில்லை.

10. உண்மையிலேயே எனது மகளை மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருந்தால் அந்த ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு தாக்கல் செய்யாததால் எனது மகளை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. எனது மகளுக்கு உடல் உபாதைகள் எதுவும் உள்ளதா என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. அவர் மாத்திரைகள் எதுவும் உட்கொள்கிறாரா என்றால் இல்லை.

11. எனது மகளுக்கு நரம்பு தளர்ச்சி உள்ளது என்றாலும், அதற்கு அவர் தொடர்ந்து மருந்து மாத்திரைகள் எடுத்து வந்தார் என்றாலும், அதை மறைத்து 1 ம் எதிர்மனுதாரருக்கு எனது மகளை திருமணம் செய்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**12.** சுமார் **13** மாதங்கள் எனது மகளும் மருமகனும் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். அந்த **13** மாதங்களில் எனது மகளுக்கும் மருமகனுக்கும் சண்டை ஏற்பட்டதாக புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் செங்கல்பட்டு காவல் நிலையத்தில் கொடுத்துள்ளேன். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தற்கான புகாரின் நகலையோ அல்லது புகார் ஏற்பு சான்றின் நகலையோ ஆவணமாக வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**13. 09.06.2019** அன்று நானும், எனது கணவர் மதுரை, முருகன், குமார் ஆகியோர் சேர்ந்து **1**ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினரை தாக்கினோம் என்று **1**ம் எதிர்மனுதாரர் செய்யூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் **09.06.2019** அன்று நானும், எனது கணவர் மற்றும் எனது மகன் குமார் மற்றும் அவரது மனைவி தீப்தி ஆகியோர் எனது மகளை பார்க்க விளங்கனூருக்கு சென்றோம். மகளை பார்க்க வந்த இடத்தில் கலா, கண்ணகி, முருகன், அருள் ஆகியோர் எங்களை அடித்து காரை உடைத்துவிட்டார்கள். அவர்களே எங்களை அடித்துவிட்டு நாங்கள் அடித்ததாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டார்கள். எனவே, எதிர்மனுதாரர்கள் எங்கள் மீது புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

**14.** எதிர்மனுதாரர்கள் எங்களை தாக்கி, காரை சேதப்படுத்தியது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளோமா என்றால் **31.08.2019** அன்று செய்யூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம். சம்பவம் நடந்து **2** மாதங்கள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

**15.** உண்மையிலேயே அவ்வாறு சம்பவம் நடந்திருந்தால் சம்பவ தினத்தன்றே புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், எனது உறவினர் முருகன் என்பவரின் செல்வாக்கை பயன்படுத்தி இரண்டு மாதங்கள் கழித்து எதிர்மனுதாரர்கள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட சி.எஸ்.ஆரில் முருகனின் பெயரை தவறாக சேர்த்துள்ளார்களா என்றால் தவறாகத்தான் சேர்த்துள்ளார்கள். எனவே, இரண்டு மாதங்கள் கழித்து நான் கொடுத்த புகாரிலும், போலிசார் **1** முதல் **6** எதிர்மனுதாரர்களை தவறாகத்தான்

சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

**16.** நான் சொல்வது போல் இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் 1ம் எதிர்மனுதாரர் மதுராந்தகம் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி 25.06.2019 அன்று மனுதாக்கல் செய்ததன் பிறகு பொய்யான காரணங்களை கூறி செய்யூர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததன் அடிப்படையில் எனது மகள் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**17.** எனது மகள் 1ம் எதிர்மனுதாரருடன் மொத்தத்தில் 5 மாதங்கள் மட்டுமே சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளார் என்றாலும், நான் இந்த வழக்கிற்காக 13 மாதங்கள் சேர்ந்து வாழ்ந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**18.** வழக்கிற்காக 1ம் எதிர்மனுதாரருக்கும் மனுதாருக்கும் பிரச்சனை என்றும் வெளியூரில் உள்ள மற்ற எதிர்மனுதாரர்களை அலைகழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எனது மகளால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் எனது மகளுக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** ... இல்லை.

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- Tmt. N. Preethi.,
DM Cum JM
Cheyyur